**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | Village: |
| Preliminary Register : CC.128/2020 | Age :55 |
| Sessions : | Taluk : |
| Deposition of Witness for : LW8/ PW-6 | |
| Name : ராஜேஷ்கண்ணன் உதவி ஆய்வாளர் | Religion : |
| Father's/Husband's Name : கோவிந்தசாமி | |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 29.10.2025.**

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 கு.வி.மு.ச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு சிலை கடத்தல் தடுப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் குமார் 1151 தற்போது பணியிலிருந்து எங்கு சென்றார் என்று தெரியாத காரணத்தினாலும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் என்பதாலும் அவருக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். நான் கடந்த 07.09.2020 ம் தேதி திருநீலக்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த .2020 ம் ஆண்டு தலைமை காவலர் குமார் 1151 நிலைய பொறுப்பில் இருந்தபோது கும்பகோணம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த

அசா1 செங்கோல்மேரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் ஆஜராகி திருநீலக்குடி காவல் நிலைய மனு எண்.193/2020 ஐ வழங்கி விசாரணைக்கு பிறகு கடந்த 07.09.2020 ம் தேதி காலை 9 மணிக்கு காவல் நிலைய குற்ற எண். 940/2020 ல் சட்டபிரிவுகள் 294(பி), 324, 354, 506(2) இ.த.ச-வின் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்தார். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். மேற்படி வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 10 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மரியதாஸ் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ( **அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) பின்னர் பட்டியல் சாட்சிகள் செங்கோல்மேரி, அருள்தாஸ், சர்மிளா ஆகியோர்களை கும்பகோணம் அரசு மருத்துவமனையில் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் அன்றைய தினமே பகல் 12.30 மணியளவில் எதிரியின் வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்த எதிரி ஆரோக்கியதாஸ் என்பவரை அடையாளம் கண்டு காரணம் கூறி கைது செய்து, நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைத்து உரிய நடைமுறைக்குப்பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 24.09.2020 ம் தேதி கும்பகோணம்அரசு மருத்துவமனை சென்று அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் முகைதின்அப்துல் காதர் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி அ.சா.1 க்கான காயச்சான்று பெற்று வந்தேன். பின்னர்

இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு ஆஜர் எதிரிக்கு எதிராக 07.09.2020 ந் தேதி சட்ட பிரிவுகள் 294(பி), 324, 354, 506(2) இ.த.ச-வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**இந்த வழக்கை** 07.09.2020 ம் தேதி காலை 9 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். வழக்கு சம்பவம் நடந்த தேதி 03.09.2020 இரவு 8.30 மணி என்றால் சரிதான். சுமார் 4 நாட்கள் கால தாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை 07.09.2020 ம் தேதி 9 மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற பணிக்காக தினமும் காலை 10 மணிக்கு காவலர்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்போம் என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை 3.09.2020 ம் தேதி இரவு எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்க ஆஜர் செய்தபோதுதான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்ற பின்னிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில், இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரியை சொன்ன நாள், நேரத்தில், இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை.** இல்லை

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர் (FAC)**